DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 87/2021 |
| Deposition of witness | : | P.W - 2 |
| Name | : | மணிமன்னன் |
| Father's /Husband Name | : | அமிர்தலிங்கம் |
| Village | : | வலங்கைமான் |
| Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 61 |
| Occupation | : | மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day August 2024.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது திருவாரூர் மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்று வலங்கைமானில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 02.08.2020ம் தேதி பகல் 12.30 மணியளவில் நன்னிலம் வட்டாட்சியராக பணியில் இருந்த போது மணல் கடத்தல் சம்பந்தமாக முடிகொண்டான் கொத்தவாசல் ரயில்வே கீழ்பாலம் அருகே நானும், கிராம நிர்வாக அலுவலர் பிரகாஷ்கண்ணா என்பவருடன் கண்காணித்து வந்தபோது அவ்வழியே வந்த TVS Heavy Duty 7364 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மணல் மூட்டை ஏற்றி வந்தவரை மறித்து விசாரித்த போது என்னை ஏன் மறிக்கிறீங்க என்று குச்சிகாரி தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டி என்னை என்ன நீ பண்ணிடுவ என்று கருங்கல்லை எடுத்து என்னை தாக்கினார். அதனால் என்னுடைய பணியை முடீக்க இயலவில்லை. இதுசம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டி நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் பிரச்சனை செய்தவர் ஆஜர் எதிரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 87/2021 |
| Deposition of witness | : | P.W - 3 |
| Name | : | பிரகாஷ்கண்ணன் |
| Father’s /Husband Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | நீலக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 38 |
| Occupation | : | கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day August 2024.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நன்னிலம் வட்டம் நீலக்குடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். அ.சா.2 மணிமன்னன் வட்டாட்சியரை எனக்கு தெரியும். கடந்த 02.08.2020 ம் தேதி பகல் 12.30 மணியளவில் நான் முடிகொண்டான் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது நன்னிலம் வட்டாட்சியர் மணிமன்னன் என்பவருடன் முடிகொண்டான் கொத்தவாசல் ரயில்வே கீழ்பாலம் அருகே மணல் கடத்தல் சம்பந்தமாக கண்காணித்த வந்தபோது அவ்வழியே வந்த TVS XL Super வண்டியில் மணல் மூட்டை ஏற்றி வந்தவரை எங்கள் உதவியுடன் தாசில்தார் மேற்படி இருசக்கர வாகனத்தில் மணல் ஏற்றி வந்த நபரை மறித்த விசாரித்த போது தாசில்தார் மணிமன்னன் அசிங்கமாக திட்டி கப்பிக்கல்லை எடுத்து தாக்கல் முயன்றார். எங்களது வேலையை செய்ய விடாமல் தடுத்தார். எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நன்னிலம் காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்தார். ஆஜர் எதிரி தான் அன்றைய தினம் அ.சா.2 டம் பிரச்சனை செய்த நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 87/2021 |
| Deposition of witness | : | P.W - 4 |
| Name | : | பூமிக்குமார் |
| Father’s /Husband Name | : | ராமையன் |
| Village | : | திருத்துறைப்பூண்டி |
| Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Age | : | 58 |
| Occupation | : | வட்டாட்சியரின் வாகன ஓட்டுனர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day August 2024.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது திருத்துறைப்பூண்டி வட்டாட்சியரின் வாகன ஓட்டுனராக பணியாற்றி வருகிறேன். அ.சா.2 மணிமன்னன் வட்டாட்சியரை எனக்கு தெரியும். கடந்த 02.08.2020 ம் தேதி பகல் 12.30 மணியளவில் நான் நன்னிலம் வட்டாட்சியரிடம் வாகன ஓட்டுனராக பணியில் இருந்த போது முடிகொண்டான் கொத்தவாசல் அருகே மணல் கடத்தல் சம்பந்தமாக நானும், வட்டாட்சியர் மணிமன்னன் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பிரகாஷ்கண்ணா ஆகியோருடன் கண்காணித்த வந்தபோது அவ்வழியே வந்த TVS XL Super வண்டியில் மணல் மூட்டை ஏற்றி வந்தவரை எங்கள் உதவியுடன் தாசில்தார் மேற்படி இருசக்கர வாகனத்தில் மணல் ஏற்றி வந்த நபரை மறித்த விசாரித்த போது தாசில்தார் மணிமன்னனை குச்சிகாரி மவனே தேவடியா மவனே என்று அசிங்கமாக திட்டினார் எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நன்னிலம் காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்தார். ஆஜர் எதிரி தான் அன்றைய தினம் அ.சா.2 டம் பிரச்சனை செய்த நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.